மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
RASL
ராசி சில்க்ஸ்

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 09 வெள்ளிக்கிழமை (22 - 04 - 1994) UTHAYAN A Lively National Daily Tamil கதிர் 145

# இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு; உலக வங்கி அதிகாரிக்கு சிறிமா உறுதி

## நேற்று முக்கால்மணி நேரம் சந்திப்பு

கொழும்பு, ஏப்ரல் 22

இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கை, எதிர் வரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி வெற்றியீட்டினால் தமிழர்களுடன் அது பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்.

எதிர்க் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, தம்மைச் சந்தித்த உலக வங்கியின் தெற்காசிய அலுவல்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர் போல் அய்சென் ரனிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

நேற்று நண்பகல் நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் நீடித்தன.

இச்சந்திப்பில், உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி றொபர்ட்ஸன் பென்ஞறோ, சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா, சு.க. எம்பிக்களான லஷ்மன் ஜயக்கொடி, இங்ஸ்ஸி பீ. விக்கிரமரத்தினா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினை தொடர்பான கொள்கைபற்றி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உலக வங்கி அதிகாரிக்கு விளக்கமளித்தார்.

[இ-எ-6]

## பிளாம்பயான் நரோமா கப்பல்கள்

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய நோயாளிகளுடன் நேற்று காலை பருத்தித்துறைக்கு வந்த பிளாம் பயான் கப்பல், கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காகச் செல்லும் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### முச்சந்தி முரளி



அப்ப சிப்பாய்களுக்கு தப்பி ஓடவும் பயிற்சி அளிப்பினமோ......!

### காரைநகரிலிருந்து ஷெல்

## 7 பிள்ளைகளின் தாயார் தலைசிதறி மரணம்

சுழிபுரம், ஏப். 22

காரைநகரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது சுழிபுரம், நெல்லியான், கல்விளான் பகுதியில் பெண் ஒருவர் தலைசிதறி மரணமானார்.

ஏழு பிள்ளைகளின் தாயாரான மாரியன் சரசு (வயது38) என்பவரே மரணமானவர் ஆவார்.

நேற்று முன்தினம் இரவு 7. 15 மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

அதேசமயம் திருவடிநிலைக் கடலில் இருந்து கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களும், வலந்தலைச் சந்தியில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப் பட்டன.

ஷெல்கள் கலிக்கொண்டு வந்து பொன்னாலை வயல் குளக்கரைப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. (இ-15-28)

## புலிகள் மீதான தடை நீடிக்க தமிழக அரசு தகுந்த ஆதாரம் சமர்ப்பிக்க வேண்டும்

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதற்குத் தேவையான புதிய ஆதாரங்களைத் தமிழக அரசு சமர்ப்பித்தால் இதுகுறித்து மத்திய அரசாங்கம் நிச்சயம் பரிசிலனை செய்யும்.

மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் ராஜ்ய சபையில் நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

கேள்வி நேரத்தின் பின்னர் அ. தி. மு. க. எம்பிக்கள் இப்பிரச்சினையை எழுப்பிய போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உரிய ஆதாரங்களை தமிழக அரசு அளித்தால்தான் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிக்கமுடியும் என்றும் —

சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்கள் நடுவர் மன்றத்தினால் பரிசீலிக்கப்படும் என்றும் — அமைச்சர் சவான் கூறினார்.

தமிழக அரசுக்கு விரோதமாகச் செயல்படும் எண்ணம் ஏதும் மத்திய அரசிடம் இல்லை என்றும் —

விடுதலைப் புலிகள் மீதான தடைபற்றி இவ்வளவு பெரிய சர்ச்சை எழுந்துள்ளதன் காரணம் தமக்குப் புரியவில்லை என்றும் — அமைச்சர் சவான் கூறினார்.

## படையினருக்கு புது முறையில் யுத்த பயிற்சி அளிக்கப்படும்

### நாடாளுமன்றில் பிரதமர் ரணில் தகவல்

கொழும்பு, ஏப். 22

படையினருக்குப் புதிய முறையிலான யுத்தப் பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. இதற்கென படை உயர் அதிகாரிகள் படையில் இருந்து தகுதியானவர்களை தெரிந்தெடுப்பர்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்துப் பேசுகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் சிறந்த முறையில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக படையினருக்கு பயிற்சியும் மற்றும் வசதிகளும் செய்து கொடுக்கப்படுள்ளன. என்றும் அவர் கூறினார். (இ-எ)

## கொல்லப்பட்ட இந்திய ராணுவ அதிகாரி யாழ்ப்பாணத்தில் கடமை ஆற்றியவர்

புதுடில்லி, ஏப். 22

ஜம்மு - காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் உள்ள இராணுவ ஆயுதக் கிடங்கு வெடித்த போது கொல்லப்பட்ட இந்திய இராணுவத்தின் மேஜர் ஜெனரல் ஈ. டபிள்யு. பெர்னாண்டஸ் இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதை அடுத்து 1987 ஆம் ஆண்டு ஜூலை 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தடைந்த முதல் தொகுதி இந்திய இராணுவ அதிகாரிகளில் இடம் பெற்றிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அப்போது அவர் பிரிகேடியர் தரத்தில் இருந்தார்.

ஸ்ரீநகர் ஆயுதக்கிடங்கு வெடிப்புச் சம்பவம் கடந்த மாதம் 29 ஆம் திகதி இடம் பெற்றது.

மேஜர் ஜெனரல் பெர்னாண்டஸ் லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டு இந்திய இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக கடந்த முதலாம் திகதி பதவியேற்க இருந்தார்.

விபத்தில் கொல்லப் பட்ட சமயம் மேஜர் ஜெனரல் பெர்னாண்டஸ் கல்கத்தாவில் வில்லியம் கோட்டையைத் தலைமையகமாகக் கொண்டுள்ள இந்திய இராணுவ கிழக்குக் கட்டளைப்பீடத்தின் பொறுப்பதிகாரியாக இருந்தார்.

5-8-1987 இல் பலாலி விமானத் தளத்தில் வைத்து இலங்கைப் பாதுகாப்புச் செயலாளரிடம் விடுதலைப் புலிகளின் சார்பில் யோகி பிஸ்டலை ஒப்படைத்தபோது அந்நிகழ்வில் மேஜர் ஜெனரல் ஹர்கிரத்சிங்குடன் பெர்னாண்டஸும் கலந்து கொண்டார்.

இந்திய அமைதிப்படையின் பிரதம தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்ட பெர்னாண்டஸ் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயர் தலைவர்களான கிட்டு, குமரப்பா, யோகி ஆகியோருடன் விரைவாக தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

10-10-1987 இல் இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் ஏற்பட்ட பிறகு பெர்னாண்டஸின் பெயர் அவ்வளவாக அடிபடவில்லை என்று "புரொண்ட் லைன்" சஞ்சிகையில் தெரிவிக்கப்படுகிறது.

தற்செயலாக ஆயுதக் கிடங்கு வெடித்ததனால்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## இலங்கை – இந்திய பேச்சுக்கள் போதிய பலன் அளிக்கவில்லை

### தமிழக மீனவர் விவகாரம்:

## பேச்சுக்கள் நடந்த பின்பும் தாக்குதல் நீடிக்கின்றது

### சட்டசபையில் ஜெயலலிதா

புதுடில்லி, ஏப். 22

கச்சதீவுக் கடலில் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது தொடர்பாக கடந்த மாதம் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் இலங்கை — இந்திய அதிகாரிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்வார்த்தைகள் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை.

புரொண்ட்லைன் சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி 84 தமிழக மீனவர்கள் இதுவரை கொல்லப்பட்டனர் என்றும் —

162 பேர் காயமடைந்தனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

தமிழக மீனவருக்குச் சொந்தமான சுமார் 60 படகுகள் இலங்கைக் கடற்படையினரால் முற்றாக அழிக்கப்பட்டன. மற்றும் பல நூறு படகுகள் சேதமாக்கப்பட்டன. என்றும் புரொண்ட் லைன் சஞ்சிகை தெரிவிக்கிறது.

1993 செப்டம்பரில் திருமலை தொடக்கம் மன்னார் வரையான கடல் பகுதியில் படகுப் போக்குவரத்தை இலங்கை அரசு முற்றாகத் தடை செய்ததை அடுத்து இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் 10 தமிழக மீனவர்கள் உயிரிழந்தனர்.

(இ-எ)

சென்னை, ஏப். 22

இலங்கை—இந்திய அதிகாரிகள் பேச்சுகள் நடத்திய பின்னரும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

முதலமைச்சர் ஜெயலலிதா தமிழக சட்டசபையில் நேற்று இத் தகவலை வெளியிட்டார்.

இலங்கைக் கடற்படை ஓர் அந்நியப்படை என்றபடியால் அதன் மீது தமிழக அரசு நேரடி நடவடிக்கை எடுக்க முடியாது; மத்திய அரசுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

## கிழக்கில் 5 அதிரடிப்படை முகாம்கள் மூடப்பட்டன!

கொழும்பு, ஏப். 22

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, சம்மாந்துறை, பெரியநீலாவணை ஆகியஇடங்களிலும் —

மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதியில செட்டிபாளையம், குருமன்வெளி ஆகிய இடங்களிலும் —

இருந்த விசேட அதிரடிப் படையினரின் முகாம்கள் கடந்த தங்களன்று மூடப்பட்டன.

இப்பகுதிகளில் பொலீஸ் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு பொலீஸாரே இனிமேல் பாதுகாப்புக் கடமைகளை மேற்கொள்ளவிருப்பதாக விசேட அதிரடிப்படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சுவிஸிலிருந்து 300 தமிழ் அகதிகள் இவ்வருடம் வருவர்

பேர்ன், ஏப். 22

சுவிட்சர்லந்து நாட்டில் அகதிகளாக தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் போவதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

அகதிகளைத் திருப்பி அனுப்பும் பணி இவ்வாண்டு ஆரம்பமாகும் என்றும்—

இவ்வருடம் 800 தமிழர்களும் அடுத்த வருடம் 300 தமிழரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல் அபாயம் அவ்வளவாக இல்லை என்றும்—சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது.

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முதலாவது ஐரோப்பிய நாடு சுவிட்சர்லந்து ஆகும்.

இரண்டாவது உலகப் போரின் போது நாஸிப் படைகளின் அட்டூழியத்துக்கு அஞ்சித் தப்பியோடி வந்த யூத மக்களுக்கு அடைக்கலம் தர சுவிஸ் அரசு மறுத்தது. தற்போது இலங்கையில் இனப்பிரச்சினை தீர முன்னரே தமிழ் மக்களைத் திருப்பி அனுப்புவது யூதர்களுக்கு எதிராக அன்றைய சுவிஸ் அரசு நடந்துகொண்டதைப் போன்று மனிதாபிமானமற்ற நடவடிக்கையே என சுவிஸில் உள்ள பல மனித உரிமை அமைப்புகளும், கிறிஸ்தவ திருச்சபையும் கடுமையாகக் குறை கூறியுள்ளன.

## பஸ் சோதனையின் போது பொலிஸ் சுட்டுக் கொலை

கொழும்பு. ஏப். 22

மட்டக்களப்பில் இருந்து ஏறாவூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றைச் சோதனையிட முயற்சித்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவரைச் சுட்ட நபர், அவரிடமிருந்த ரி56 துப்பாக்கியை அபகரித்துக் கொண்டு தலைமறைவாகிவிட்டார் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ-6)

### மட்டக்களப்பு – அம்பாறையில்

## பிரகடனப்படுத்தப்படாத இராணுவ ஆட்சி நடக்கிறது

### தமிழன்பன் தெரிவிப்பு

மட்டக்களப்பு, அம்பாறையில் பிரகடனப்படுத்தப்படாத இராணுவ ஆட்சியே நடைபெறுவதாக மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழன்பன் தெரிவித்திருக்கிறார்.

புலிகளின் குரல் வானொலிக்கு வழங்கிய விசேட பேட்டியில் அவர் இவ்வாறு கூறினார்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் அரச அதிபர்கள் உதவி அரச அதிபர்கள் உள்ள போதும் பாதுகாப்பு இணைப்பதிகாரி பிரிகேடியர் ரொஹான் குணவர்த்தனாவின் இராணுவ ஆட்சி தான் நடக்கிறது. சகல மட்டங்களிலும் இணைப்பதிகாரியே கட்டுப்பாடுகளை விதிக்கின்றார் என்றும் அவர் தெரிவித்[illegible]

## இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 22

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வெள்ளிக்கிழமையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடு[illegible] துறையினர் அறிவித்துள்ள[illegible]

### வடக்கு-கிழக்கு இணைப்பு:

## சர்வசன வாக்கெடுப்புக்கு சந்திரிக்கா ஆதரவு இல்லை

கொழும்பு. ஏப். 22

வடக்கு – கிழக்கு இணைப்புக் குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று நான் யோசனை கூறப் போவதில்லை.

சுதந்திரக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் மேல்மாகாண முதலமைச்சருமான திருமதி சந்திரிகா குமாரணதுங்கா புரொண்ட்லைன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு யுத்தம் பற்றி அவர் இப்பேட்டியில் சொன்னதாவது:-

தெற்கில் நாம் வடக்கு — கிழக்கு நெருக்கடியை பிரதான பிரச்சினையாக முன்வைக்கவில்லை.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐக்கிய தேசிய அரசாங்கம் தவறி விட்டது.

தமிழர்கள் சுயமரியாதையுடன் வாழ வழி வகுக்கக் கூடிய கௌரவமான தீர்வு ஒன்றையே நாம் ஆதரிக்கின்றோம்.

வடக்கு—கிழக்கு இணைப்பு

[6 ஆம் பக்கம் பார்க்க]

### ஜனாதிபதி பதவி ஏற்க

## சந்திரிகாவுக்கு வயது பிரச்சினை அல்லவாம்

கொழும்பு, ஏப். 22

ஜனாதிபதி பதவியை வகிப்பதற்கு எனக்கு வயது போதாது என்று நான் எண்ணவில்லை.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா புரொண்ட்லைன் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை கட்சிதான் முடிவுசெய்யும். பொறுப்புக்களை ஏற்பதற்கு நான் பயப்படவில்லை. பொறுப்பை என்னால் கையாள முடியும். எனது வயது ஒரு பிரச்சினை அல்ல. குறைந்த பட்சம் அரசமைப்பு வயதை நான் தாண்டிவிட்டேன்" என்றும் அவர் கூறினார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தியோலை

# இணுவையம்பதி செகராசசேகரப் பிள்ளையார் கோயில்

# புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா மலர்

22 - 04 - 1994 பிற்பகல் 2-30 மணி

## அஞ்சேல் என்று அபயகரம் நீட்டும் செகராசசேகரப் பிள்ளையார்

உண்ணீர் உவக்கும் உழ தாண்பெருக்கும் மாண்புறு மருதம் இணுவையம்பதி. கண்ணெனும் கல்வி பெறுவதற்கு உகந்த திருவிடமென மேற்குலகோர் தேர்ந்த திருவிடம். இசையும் தமிழும் இணைந்து வாழ இலங்கு நீறு துலங்கும் மேனியர் பொலிந்து வாழ்ந்த; வாழும் புண்ணிய பூமி, ஈழத்துத் திருவாரூர் என இயம்பும் இணுவையம்பதியில் நாளெலாம் நல்லிசை தவழும். தேவாலய மணியோசை வேதமோதும் வேதியர் தருமொலி, இசை வேளாளர் எழுப்பும் குழைவான நாத ஒலி, விளை நிலப்பரப்பில் இதமுற எழும்பும் கறவையின் கனிவொலி, கூட்டுமுயற்சியில் நாட்டுயர்வுறும் காரிகாத்த ஏராளர் களிப்பினால் எழு மொலி கலந்தார்ப்ப - ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே என்று இறைநுகர் இணுவை ஈழத்தின் கண்ணெனலாம். இத்தலத்துக்கும் எழுவான் இரவியாய், இமையவர் துயர் களைந்த, பெண்சுமந்த மேனியன் பெரும்பேறாய் வந்து நித்து பழம்பெற்ற முன்னைப் பழம்பொருள் பஞ்சவிநாயகன் செகராசசேகரன் சிந்தைகுடி கொண்ட நற்தஞ்சாக்கன்று எழுந்தருளும் பருத்தியொல்லை புண்ணிய பூமியே.

பருத்தியொல்லை செகராசசேகர மன்னன் வாழ்ந்த திருவிடம். வாழ்வாங்கு வாழ்ந்த மன்னன் செகராசசேகர மாலை என்னும் மெய்நோய் போக்கும் நன்னூலும், செகராசசேகரம் என்னும் விண்மீன் விளைக்கும் தன்மை பகரும் சோதிட நூலும் தந்தான். மன்னன் மரபில் வந்த இற்றைச் சான்றோர் நெற்றிக் கண்ணன் மைனை நெஞ்சிருத்தி நெக்குருகி துதிசெய்யும் பெற்றிபோற்றற்குரியதே. இத்திருப்பணியால் திருக்கோலச் சித்திரத்தேர் செய்யும் முனைப்பு எம்மனோர்க்கு இயைதாகமாயிற்று.

''வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தனைய துயர்வு'' என்ற குறளடிக்கொப்ப அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொலும் உடைய செம்மனத்தார் செயற்பட்டால் வசந்தகாலச் சித்திரையில் விக்கின விநாயகன் சுந்தரம் சேர் சித்திரத்தேரில் வீதி உலா வர ஏதுவாயிற்று.

கோயில் வளர்ச்சிக்கு வளம் சேர்த்த வள்ளன்மையார் உள்ளங்களுக்கு நன்றி சேர்ப்பது நற்றமிழர் கடனாகும். கைவினைப் பெரியோன் கலாகேசரியின் கைவண்ணம் துலங்கத் தெறிக்க ஆக்கப்பாடான வியத்தகு சித்திரத் தேர் காணும்போதெல்லாம் கலாகேசரியின் பெருமை நெஞ்சங்களில் நிழலாடும்.

இத்தேர்ப்பணியான நற்பணி முந்துற பல்வேறு வழிகளில் எமக்கு மனங்கொண்டு தவிய செம்மனத்தார்க்கெல்லாம் பஞ்சமுக விநாயகன் அஞ்சேலென்ற அபயகர கடாட்சம் கிடைக்க எண்ணுவதல்லால் தேர்த்திருவிழா உபயகாரர்களாகிய எம்மால் வேறு செயற்பாலதொன்றுண்டோ!

விநாயக ரதம் விளங்கு வேண்டும் வரங்களெல்லாம் வாரி வழங்கும் விநாயகனடி பணிந்தின்புற்றிருப்போமாக. சிவசேவை சிவசேவை என்பதை விநாயகன் அடியார்கள் என்றும் உளத்திருத்தி தொண்டு செய்துய் மெழிக்போல், பருத்தியொல்லை வாழ் மக்கள்— மன்னன் இருக்கை மாட்சி பெற்றதற்கேவாய் — மாண்புற்றிலங்க வேண்டுவாராக. முயன்ற திருப்பணி முட்டற முற்றற அருளிய கருணைமாகடல் கருணாகரன் கழல் என்றும் சரண் புகுவமே ✶

**இரா. சுந்தரலிங்கம்,**
இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர்,
[தேர்த் திருப்பணி — தேர்த்திருவிழா உபயகாரர் சார்பில்]

## ஆசியுரைகள்

இணுவில் செகராசசேகரப்பிள்ளையார் பெருமானுக்குச் சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்ட விழா எடுக்க விருப்பதறிந்து மட்டில்லா மகிழ்ச்சி.

பிரணவ சொரூபியாம் விநாயகப் பெருமானுக்கு நாம் ஆற்றும் கைங்கரியங்களெல்லாம் அதிஉயர் ஸ்தானம் வகிப்பன.

அவரின் திருவருட்கடாக்ஷம் பெற்றுய்ந்தவர்கள் ஔவைப் பெருமாட்டி முதல் அளவிலா அடியார்கள் பலர்.

இச்சித்திரத் தேரை அமைத்துதவிய கலாகேசரி, ஸ்தபதியார் தம்பித்துரை அவர்களைப் பாராட்டுகிறோம்.

எல்லோருக்கும் விநாயகப் பெருமானின் திருவருளை உளமார வேண்டி, எமது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்,
நல்லை ஆதீன முதல்வர்.

இணுவில் பதியில் அருட்காட்சி தரும் திருக்கோயில்கள் அனைத்தும் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. இவற்றில் ஸ்ரீசெகராசசேகரப் பிள்ளையார் ஆலயம் இந்நாட்டில் அரசு புரிந்த தமிழ் மன்னர் ஆட்சியில் இணைந்தது.

''நாமிருக்கும் நாடு நமது'' என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எமது சைவப் பண்பாட்டுச் சின்னங்களாகிய திருக்கோயில்களைப் பேணும் கடமைக்கு உட்பட்டுள்ளோம்.

இணுவில் வாழ் சைவமக்கள் இக்கடமையில் முன் நிற்பவர்கள். கோயிற் திருப்பணியை உயிராக நேசிப்பவர்கள். இந்த வகையில் இன்று விநாயகப் பெருமானுக்கு அழகும் கலையம்சமும் வாய்ந்த ஒரு சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது மிகவும் பாராட்டுக்குரியது.

திருத்தேரில் இருந்து பவனி வரும் பெருமான் அன்பர்களின் உளத்தேரிலும் நீங்காத காட்சியைக் கொடுத்து ஆனந்தமடைய வைப்பானாக என்று பிரார்த்தித்து இப்பணியில் ஈடுபட்ட அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி;
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை

## வாழ்த்துரைகள்

விக்கினங்களை நீக்கும் விநாயகப் பெருமானுக்கு இன்று புதிய தேர் உருவாக்கப்பட்டுள்ள கைங்கரியம் இணுவை வாழ் மக்களுக்கு பெருமிதம் அளிக்கும் ஒரு விஷயமாகும்.

சைவமும் தமிழும் வளர்க்கும் பணியில் தன்னையே அர்ப்பணித்துள்ள இணுவை வாழ் மக்கள் இன்று விநாயகனுக்கு புதிய தேர் ஒன்றை அமைத்து வெள்ளோட்டம் விடுவது சமய மறுமலர்ச்சிக்கு ஒரு உத்வேகமாக அமையட்டும்.

கா. மாணிக்கவாசகர்
யாழ் அரச அதிபர்.

மஹோற்சவங்களில் முக்கியமானதொரு விழா தேர்த் திருவிழா. இவ்விழா பஞ்சகிருத்தியங்களில் ஒன்றான அழித்தற்றொழிலைக் குறிப்பது. அழித்தல்-ஆணவத்தை அழித்தல்.


ஓங்கார மூர்த்தியாகிய செகராசசேகரப் பிள்ளையார் ஆரோகணித்து அடியார்களுக்கு அருளும் வண்ணம் புதியதொரு சித்திரத் தேரினைச் சைவ மெய்யடியார்கள் உருவாக்கி இருப்பதை அறிந்து பெரிதும் மகிழுகின்றேன். தேரை உருவாக்கும் பணியில் அனுபவம் வாய்ந்தவரான கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்களின் தலைமையில் சிற்பிகள் உழைத்ததை அறியும் பொழுது குறித்த மகிழ்ச்சி இருமடங்காகிறது.

விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனாக இருப்பவர் செகராசசேகர விநாயகர். அவருக்கென உருவாக்கிய சித்திர தேரின் வெள்ளோட்ட விழா, சாஸ்திரோக்தமாக அமையும் வண்ணம் எல்லாம் வல்ல விநாயகரின் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்;

அ. துரைராசா,
யாழ்: பல்கலைக் கழக-
முன்னாள் துணைவேந்தர்.

## நிகழ்ச்சி நிரல்

தலைமையுரை:
கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
வரவேற்புரை:
பண்டிதர் வித்துவான் இ. திருநாவுக்கரசு
ஆசியுரைகள்;
1. சிவஸ்ரீ இராமநாத ஸ்ரீஸ்கந்த ராஜக்குருக்கள்
2. சிவஸ்ரீ இராமநாத ஸ்ரீதரக்குருக்கள்
3. நல்லை குருமகா சந்நிதானம்
4. சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
5. அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்
சிறப்புரைகள்:
1. திரு. கா. மாணிக்கவாசகர் (யாழ் அரச அதிபர்)
2. கலாநிதி சபா ஜெயராசா (தலைவர், நுண்கலைத் துறை, யாழ் பல்கலைக்கழகம்)
3. திரு. கோ. சி வேலாயுதம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் யாழ் கல்வி வலயம் -2)
பாராட்டுப்பத்திரம் வாசித்தளித்தல்; ''கவிமாமணி'' யாழ். இணுவையூர் பிரம்மஸ்ரீ ந. வீரமணிஐயர்
தேரை உருவாக்கிய சிற்பாசாரியார் கலாகேசரி திரு. ஆறுமுகம் தம்பித்துரைக்கு விருது வழங்கி, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்
நன்றியுரை:
பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம்



### தமிழ் சிறந்து கலை சிறந்து வாழி வாழி

சீரடியார் வந்துதவத் தெய்வசிற்பி
திருத்தம்பித் துரைக்கலைஞன் ஆக்கித்தந்த
தேரினிலே சிங்காரக் கொலுவிருக்கும்
செகராச சேகரவி நாயகர்தம்
பேரருளால் தமிழ்சிறந்து கலைசிறந்து
பேணுசிவ நெறிசிறந்து தருமம்செல்வம்
தாரிணுவில் நிலைசிறந்து பண்புநீதி
சமாதானம் சிறந்தோங்கி வாழிவாழி

- அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்

## தெய்வீகத் திருப்பணி

இணுவில் இயற்கை வளம் நிறைந்ததும் தெய்வீகச் சிறப்புக்களுடன் கூடியதுமாகிய திருத்தலம். இப்பிரதேசத்தின் இலக்கிய வளர்ச்சிக்கு முத்தமிழ் வல்ல அறிஞர்களும் ஆன்மீக வளர்ச்சிக்கு துறவிகளும் சிறந்த பணியாற்றியுள்ளனர்.

வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்கள் இங்கு மக்களது பண்பாட்டு நலனுக்கு நிலைக்களனாக விளங்கி வருகின்றன. பண்டைய அரசர்களாகிய பரராசசேகரன் பரராசசேகரப் பிள்ளையாரையும் செகராசசேகரன் செகராசசேகரப் பிள்ளையாரையும் வழிபட்டு மேன்மையடைந்துள்ளனர்.

சைவச் சான்றோர்கள் நிரம்ப வாழும் இணுவிலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் செகராசசேகரப் பிள்ளையாருக்கு அவனது திருவருளினால் கலைத்துவம் மிக்க சித்திரத் தேர் ஒன்று தேர்த்திருவிழா உபயகாரர்களினால் அடியார்களது உதவியுடன் உருவாகி வருகின்றமை எம் அனைவருக்கும் மகிழ்ச்சியளிக்கின்றது.

* ஆலயங்களில் நிகழும் நைமித்தியக் கிரியைகளில் (5 ஆம் பக்கம் பார்க்க)

கலாநிதி
பா. கோபாலகிருஷ்ணன்
தலைவர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

எண்ணற்ற அடியார்கள் செகராச சேகரப் பிள்ளையாரின் திருவருளுக்குப் பாத்திரராகி ...


தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சாந்தி ரெக்ஸ்ரைல்**
157 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்,
கிளை: கே. கே. எஸ். றோட்,
இணுவில்.

**சிற்றி காமென்ற்ஸ்**
திருநெல்வேலி

**சிவன் ஸ்ரோர்ஸ்**
இணுவில் மேற்கு,
இணுவில்.

**பஷன் ஹவுஸ்**
65, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவசம்பு களஞ்சியம்**
3. மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,

தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல. 16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்,

**மல்ரி ஒயில் நிறுவனம்**
இணுவில்.

**த. பரமேஸ்வரன்**
கந்தசுவாமி கோயிலடி,
இணுவில்.

**அண்ணா கோப்பி**
அண்ணா தொழிற்சாலை
இணுவில்.

தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**லிங்கம்ஸ் சில்க் ஹவுஸ்**
18 நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
கிளை: 21 C. நவீன சந்தை யாழ்ப்பாணம்.

தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்

**சோதி ரெக்ஸ்ரைல்ஸ்**
14 நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
கிளை: கே. கே. எஸ். றோட், இணுவில். [சி/7907]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

திராந்திகள், பெரிய, சிறிய இரும்புக்கேற், யன்னல் கதவு நிலைகள் விற்பனைக்குண்டு. "பூரணா டிஸ்பென்சறி, 46, இராணி வீதி, நல்லூர் (கல்வித்திணைக்களத்திற்கு அருகில்). (7332)

### வாசித்து விட்டீர்களா?

புதுமையான நாவல் "ஒகண்டா", "மக்கள் நேசன் கார்த்திகேசன் மாஸ்ரர்" ஆகிய நூல்களைப் புத்தகசாலைகளில் பெறலாம். விலை முறையே 40 ரூபா, 35 ரூபா மாத்திரமே. வீ. சின்னத்தம்பி (30516)

### பேட்டுக் குஞ்சு விற்பனை

லஹறைன் பிறவுன் 1½ மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30501)

### கோல்டன் கொமட்

கோல்டன் கொமட் 12 நாட்கள் வளர்ச்சியடைந்த பேட்டு குஞ்சுகள், சேவல்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30502)

### தூக்குமேடைக் குறிப்பு

பெர்லினில் தூக்கிலிடப்பட்ட ஜூலியஸ் பூசிக், சிறையில் இருந்தபோது எழுதப்பட்ட சிறைக்குறிப்புகள் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம். (7325)

### துளிர்

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம், சந்தா ஏற்றுக் கொள்ளப்படும். (7324)

### சூழலியல்

சூழலின் வரலாறு, அது எதிர்நோக்கும் பிரச்சினைகள், விளைவுகள், ஆபத்துக்கள் காப்பாற்றப்பட வேண்டிய அவசியம் எனப் பல விடயங்களை உள்ளடக்கிய நூல் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம். (7323)

### இலகு திருமண சேவை

32 வயது, மகம், செவ்வாய்8 கனிஸில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. Sponsor மூலம் அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு, செவ்வாய் காலையும் புதன் மாலையும் விமலா, நாச்சிமார் கோயிலடி. (30471)

32 வயது, பூசம், செவ்வாய் அற்ற, சுவிஸில் வதிவிட உரிமையுள்ளவருக்கு அழகான, சங்கீத ஞானமுள்ள மணப்பெண் உடன் தேவை. மணமகன் யாழ். உள்ளார். திருமணம் செய்து அழைக்கலாம். உடன் தொடர்புகொள்ளவும்: த. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. (30515)

### தவறிவிட்டது

சிதம்பரப்பிள்ளை லோகநாதன் ஆகிய எனது அடையாள அட்டை 570751492V) சாரதி அனுமதிப் பத்திரம் வாகன வரி அனுமதிப் பத்திரம், செஞ் சிலுவைச் சங்க அடையாள அட்டை ஆகியன 18-4-94 அன்று நுணாவிலுக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து செல்வம் கூல்பார், நவீன சந்தை, சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் [30503]

18 04-94 தம்பிராசா செல்வராணியின் அடையாள அட்டை மல்லாகத்திற்கும், பூநாறிமரத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மே/பா உதயன் சேவை நிலையம், கே. கே. எஸ். றோட், கன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும் (7079)

### மணமகள் தேவை

பூரட்டாதி, 31 வயது, சுவிஸில் வேலை பார்ப்பவருக்கு சைவபோசன மணப்பெண் தேவை. விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். திருமதி த. ஆனந்தராணி, 'தரன் இல்லம்', தேவாலய வீதி, மூளாய், சுழிபுரம். (7080)

### வீடு வாடகைக்கு தேவை

பிறவுண் றோட் கந்தர் மடம் நல்லூர் பல்கலைக்கழக சுற்றாடலில் மூன்று படுக்கை அறையுடன் சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்குத் தேவை. முற்பணம் கொடுக்கப்படும். தொடர்புகொள்ளவும்: இ. இராஜரட்ணம், 7, கச்சேரி கிழக்கு ஒழுங்கை கண்டிக்குளி. (30482)

---

## தேன் வேண்டுமா?

★ தேனீக்களை நீங்களே வீடுகளில் வளர்க்கலாம்
★ தேவையான தேனை பெற்றுக் கொள்ளலாம்,

வளர்ப்பதற்கேற்ற
★ தேனீ பெட்டிகளை
★ குடிகளுடனும்
★ இராணித் தட்டுடனும்

பெற்றுக் கொள்ள

தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:

விவசாயப்பகுதி
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,**
தாவடி.

(ஜ-7797)

---

✻ விலங்கியல் ✻
புதிய பிரிவு 2

ஆசிரியர்:
திரு. R. ஈஸ்வரதாசன் B. Sc. (Cey) Dip. in Ed

ஆரம்பம்;
**23-04-94 சனி**

(பிரிவு 1க்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது பிரிவு 2 க்கான அனுமதி வெள்ளி வரை வழங்கப்படும். நேர அட்டவணை நிறுவனத்தில் பெறலாம்)

## SCIENCE COLLEGE
## விஞ்ஞானக் கல்லூரி

பெருமாள் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

CHE. —
திரு. A. மகாதேவா
ZOO. —
திரு. R. ஈஸ்வரதாசன்
PHY. —
திரு. ரவீந்திரநாதன்
திரு. சூரியநாதன்
BOT. —
திரு. செல்வநேசன்
PURE. APP. —
திரு. குணசிங்கம்

(ஜ-7905)

---

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 24-04-94 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் சங்கப் பணிமனையில் நடைபெறும். சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ம. விக்னேஸ்வரன், செயலாளர்.
சி. சர்வானந்தன், தலைவர்,

(30497)

---

கோப்பாய் வடக்கு
## அந்தியகால சேவைச் சபை
## அந்தியேட்டி மட சேவை

கீரிமலையில் அந்தியேட்டி, பிதிர் கடன்களை நிறைவேற்ற முடியாத சிரமத்தை நிவிர்த்தி செய்யும் பொருட்டு சபையினால் சகல வசதிகளும் கொண்ட ஒரு அந்தியேட்டி மடம் கோப்பாய் கைதடி வீதியில் கடற்கரைக்கு அண்மையில் அமைக்கப்பட்டு கிரியைகள் நடைபெறுகின்றன.

கிரியைக் குருவாக கீரிமலையில் சிறப்பான கிரியைகள் செய்த பிரம்மஸ்ரீ க. சந்திரசேகரசர்மா சபையால் நியமிக்கப்பட்டுள்ளார். கிரியை செய்ய விரும்பும் குருமார் அதற்கான அனுமதியை சபைச் செயலாளரிடம் பெற்றுக் கொள்ளவும்.

கிரியைகள் செய்வோர் நேரத்தை ஒதுக்கீடு செய்வதற்குதவியாக தமது கிரியை தினத்தை முன் கூட்டியே மடப் பொறுப்பாளர் திரு. க. சின்னத்துரையுடன் தொடர்பு கொண்டு உறுதி செய்யவும்.

கோப்பாய்.
வே. சண்முகலிங்கம், செயலாளர்.
(30517)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் வேலுப்பிள்ளை நிதிராசா**

மலர்வு: 05-10-1954
உதிர்வு: 17-04-1989

திதி: 22-04-1994

ஆண்டுகள் ஐந்து சென்றாலும் – அப்பாவே!
அகமெல்லாம் வெந்து வெதும்புதே
நீண்ட வாழ்வது நீளாமல் போனதால்
நிம்மதியிழந்து தவிக்கின்றோம்-நீங்கள்
மாண்டு போனதை உங்கள் மாண்புகளை
மறந்துவாழ எங்களால் முடியாது.
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி பிரார்த்திக்கும்!

மனைவி, மகன்,
தாய், சகோதரிகள்.

இல. 14. சிவகுருநாதர் லேன்,
பறவுண்றோட்,
யாழ்ப்பாணம்.
(30514)

---

# A/L 96

**கணக்கியல் வகுப்பு**

ஆரம்பம்; **1994-04-25**
திங்கள் மாலை 4மணி

★ அனுமதிகளை முன் கூட்டியே பெறவும்.

ஆசிரியர்; **D. SAM**
76/2. Temple Road, Jaffna.

(30270)

---

ஓம் முருகா
வட்டுக்கோட்டை மாவடி
அடைக்கலந்தோட்டம்
## கந்தசுவாமி கோயில்
## 8ஆம் திருவிழா சப்பறம்

23 – 04 – 1994 சனிக்கிழமை காலை 9-00 மணிமுதல் விஷேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

திருவிழா உற்சவ நிகழ்ச்சிகளை சிவசிறி மு. ரவிக்குருக்கள் நடத்திவைப்பார்

**மாலை நிகழ்ச்சிகள்**

6-30 மணிக்கு சொற்பொழிவு. கந்தர் அனுபூதி திருமந்திரவாதி என்னும் பொருள் பற்றி பேராற்றலாளர். சைவத் தமிழ் வித்தகர் மேன்மைமிகு சிவமகாலிங்கம் (விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

★ மேளக் கச்சேரி:
தேவஸ்தான வித்துவான்
P. கண்ணன் குழுவினர்

7-30 மணியளவில்: ஈழத்தின் பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களின்
"நாதஸ்வர கானம்"

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| திரு. K. M. பஞ்சாபிகேசன் | K. நித்தியானந்தம் |
| திரு. N. K. பத்மநாதன் | K. சிவகுமார் |
| திரு. M. P. நாகேந்திரம் | P. முருகானந்தம் |

9-00 மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெற்று முருகப்பெருமான் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பெரிய சப்பறத்தில் வீதி உலா வரும் காட்சியும் இடம் பெறும்.

– 8ஆம் திருவிழா உபயகாரர்கள்!

பிரசுர அன்பளிப்பு:
வீ. கே. ரட்ணம் களஞ்சியம்,
மணியம் ஸ்ரோஸ், மாவடிச் சந்தி.
றஞ்சன் ஸ்ரோஸ் வட்டுக்கோட்டை.

★ முருகனின் அருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கிறோம்.

[7331]

---

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education centre

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

**வருடம் 4 – 10, O/L, A/L**


Spoken English Short-Hand Typing இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

**புதிய பிரிவு ஆரம்பம்; 23-04-94**

[7330) – நிர்வாகி,

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 15 – 05 – 1954

இறப்பு: 13 – 04 – 1992

**தம்பிமுத்து கனேசகுமார்**

திதி: 22-04-1994

புத்தாண்டு பிறந்ததுமே உமது நினைவு
எம்மை வாட்டுதையா
பாசமிகு மகனாய் சோதரனாய்
கடல் கடந்து சென்ற இடத்தில்
காலன் உமைக் கவர்ந்து ஈராண்டு சென்றதையா

உம்மை மறவாமல் துடிக்கும்!
பெற்றோர், மனைவி,
பிள்ளைகள், சகோதர, சகோதரிமார்,
மைத்துனர், மச்சாள்மார்.

உரும்பிராய், கிழக்கு,
சந்தல்.

(30521)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கோழி வளர்ப்புத் தொழிலில் அனுபவம் உள்ளோர்**

## தேவை

எமது சங்கத்தினால் அமுல் படுத்தப்படவிருக்கும் கோழி வளர்ப்புத்திட்டத்திற்கு நீண்டகால அனுபவமும், பயிற்சியும் உள்ளவர்கள் உடன் தேவையாக இருக்கிறது. எனவே மேற்குறிப்பிட்ட தகைமை உடையவர்கள் 30-04-1994க்கும் திகதிக்குள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒப்பந்த அடிப்படையில் சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

பதில் பொதுமுகாமையாளர்,
புங். நயி. பல நோ. கூ. சங்கம்.

201/1, 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். [சி-7904]



விடியலைத் தேடும் பறவைகள்
ஒலிப்பதிவு நாடா

இசையமைப்பாளர்
**யாழோசை கண்ணனின்**
இசை நெறியில்

இசைத்துறையில் தேர்வு பெற்ற பல பாடகர்கள், பாடகிகளின்

**செந்தமிழ் பாட்டு - II**

23 சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ] மாலை
24 யாழ் கைலாசபதி கலையரங்கம் ] 3-00

பிரபல இசையமைப்பாளர்கள்
இளையராஜா, தேவா, மரகதமணி
ஆகியோரின் தேர்ந்த இசை வண்ணங்களும் கிற்றார், புல்லாங்குழல் இசையும் நடைபெறவுள்ளன.

மேலதிக விவரங்களுக்கு:
சபாறீஸ் FANCY HOUSE
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகாமையில் பெற்றுக் கொள்ளலாம்.

நிகழ்ச்சி சிறக்க வாழ்த்துவோர்:
**வேளாங்கண்ணி புடைவை அகம்**
8A, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[30494]



**எடிசன் அக்கடமி**

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**பிரத்தியேக கணித வகுப்பு**

**O/L கணிதம்**
ஆசிரியர்
**திரு. B.P. பாஸ்கரன்**

Sat. & Sun Class: சனி, ஞாயிறு பி.ப. 3 மணி
Evening Class திங். வெள். பி.ப. 4 மணி

**ஆரம்பம்:- 22-04-1994**
வெள்ளி பிற்பகல் 4 மணி

★ பாடத் திட்டத்துடன் கடந்த 18 வருட வினாக்களும் மீட்கப்படும்.
★ O/L பரீட்சையில் கணிதத்தில் தவறிய மாணவர்களுக்கென்றே இவ்வகுப்புகள் விசேடமாக ஆரம்பிக்கப்படுகின்றன.
★ ஆரம்ப அடிப்படையில் இருந்து தொடர் பரீட்சைகள் மூலம் போதிக்கப்படும்.

[சி/7793]



**கலை வர்த்தக கல்லூரி**
**C. C. A.**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 96**
**புதிய பிரிவு ஆரம்பம்**

எமது ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. உதயன் |
| கணக்கியல் | — திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — திரு. இரட்ணம் |
| அளவையியல் | — திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம், இந்து சமயம் | — திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | — திரு. வேணா |
| தமிழ் | — திரு. தமிழ்ராஜா |
| அரசியல் | — திரு. பஞ்சு |
| கிறிஸ்தவம் | — திரு. றொபேட் |
| நாடகம் அரங்கியல் | — பிரபல ஆசிரியர் |

**ஆரம்பம்: 23 - 04 - 1994**
காலை 8-00 மணி

குறிப்பு:
1. பிரிவு I ற்கான அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
2. பிரிவு II ற்கான அனுமதிகள் மட்டும் வழங்கப்படுகின்றன.

- நிர்வாகி.

[சி-8021]


வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில்

# பொதுசன மாதாந்த பணம் 300 பேருக்கு வெட்டப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 22

வலி- வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவி பெற்று வந்தவர்களில் 300 பேருக்கான நிதி வடக்கு-கிழக்கு மாகாண சபையால் வெட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வலி - வடக்குப் பகுதியில் 3 ஆயிரத்து 8 பேர் பொதுசன மாதாந்த உதவியை பெற்று வந்தனர்.

இந்த உதவிக்கான ஒதுக்கீட்டில் 48 ஆயிரம் ரூபா வெட்டப்பட்டதால் சுமார் 300 பேருக்கு உதவி வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கை யால் இடம்பெயர்ந்துள்ள அப்பகுதி மக்களின் கஷ்டத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கான உதவியை தொடர்ந்து வழங்க உதவுமாறு வலி- வடக்கு பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் மாகாணசபை அதிகாரிகளை கேட்டுள்ளார். (த-3)

## செப்ரிசீமியா மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 22

செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த புதன்கிழமையும் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த நவரட்ணம் நிரஞ்சா (வயது 12) என்ற சிறுமியே மரணமானவராவர்

(த-15)

## கிழக்கில் 47 மைல் நீள ரயில் பாதை

# ஈரான் உதவ முன்வந்தும் ஸ்ரீலங்கா முயற்சிக்கவில்லை

## அந்நாட்டு சபாநாயகர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையிலான 47 மைல் தூரத்திற்கு ரயில் பாதை அமைக்க ஈரான் அரசு உதவி வழங்குவதாக ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதிலும் இப் பாதையை அமைக்க ஸ்ரீலங்கா அரசு முயற்சி எடுக்கவில்லை.

—இவ்வாறு கொழும்பு வந்துள்ள ஈரானிய நாடாளுமன்றசபாநாயகர் நடெக்நூ தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி இன்ரகொண்டினன்டல் ஹோட்டலில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில்—

குறிப்பிட்ட காலத்தில் இந்த ரயில் பாதை அமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாததால் அதற்கான செலவுத் தொகைதற்போது அதிகரித்துவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ)


**M. E. C.**
ரயில் றோட்,
கந்தர்மடம்.

**A/L 96**
இரசாயனவியல்
**செல்வா**
(B. Sc.)
செவ்/வெள்ளி
பி. ப. 4-00
நடைபெறுகின்றது.
(7328)



**படித்து விட்டீர்களா?**
**[illegible]**
சஞ்சிகை: 06
(30522)



**எடிசன் அக்கடமி**

யாழ்: இந்து அருகில் 411/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
கொக்குவில் இந்து அருகில் 27, K.K.S. வீதி, கொக்குவில்.

**புலமைப் பரிசில் வகுப்பு**

**ஆண்டு 5 - மீட்டல்**
கணிதம்: திரு - V. A. சிவா
தமிழ்: திரு - சி. குழந்தைவேலு

★ 4 மாத துரித மீட்டலும் அவசியமான மேலதிக பயிற்சி.
★ வாராந்த பயிற்சிப் பரீட்சைகளுடன்.

**ஆரம்பம்: 23 - 04 - 94**
சனி முற்பகல் 11 மணி
(எமது இரு நிறுவனத்திலும் ஆரம்பமாகின்றது)
(சி/7901)



**ஊரெழு கம்பன் கழகத்தினர்**
நடத்தும்

# கம்பன் விழா

இடம்: தமிழ்த்தாய் அரங்கம், ஊரெழு
(ஸ்ரீ வீரசக்தி விநாயகர் ஆலயத் திருவீதி)

இரண்டாம் நாள் (இன்று) நிகழ்ச்சிகள் காலை 9மணி

கம்பன் இசையமுது: செல்வி நாகம்மா கதிர்காமம்

கருத்தரங்கம் **"ஒப்பியல் நோக்கில் கம்பன்"**

தலைவர்: திரு. க. சிவராமலிங்கம்

கம்பனும் ஆழ்வார்களும் — பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கம்பனும் சேக்ஷ்பியரும் — திரு. கே. சோமசுந்தரம்
கம்பனும் இளங்கோவும் — திரு. க. சொக்கலிங்கம்
கம்பனும் கச்சியப்பரும் — கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர்

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 5 மணி

மங்கள இசை: — திரு. T. உதயசங்கர், திரு. R. கேதீஸ்வரன் குழுவினர்
கடவுள் வாழ்த்து: — திரு. S திலகநாயகம் போல்
தலைமையுரை: — கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
தொடக்கவுரை: — திரு. சி. பாலசுப்பிரமணியம் B. Ed.

**சுழலும் சொற்போர்**

● மையத்துறைபவர்: திரு. இ. ஜெயராஜ்

கழக் பொருள்: மானுடம் வென்று நிற்கும் மாண்பினைப் புலப்படுத்துவதில் கம்பன் பெரிதும் வெற்றி கொள்வது எப்பாத்திரங்களின் சந்திப்பிலே......

வாதிடுவோர்:
திரு. இரா. செல்வவடிவேல் — திரு. இ. நடராசா M. A.
திரு. தி. திருநந்தகுமார் — திரு. ஆறு. திருமுருகன் B. A.
திரு. த. சிவகுமாரன் — திரு. க. குமாரதாசன்
திரு. த. சிவசங்கர் — திரு. க. யோகநாதன்
திரு. ச. மணிமாறன் — திரு. ஸ்ரீ. பிரசாந்தன்

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:
**சீமாட்டி (F) பாம்**
மயிலங்காடு, சுன்னாகம்.
[சி-7903]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## உண்மையை உணர்ந்தால் சரி

கொழும்பில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள், அதனையடுத்து எல்லாளன்படை விடுத்த எச்சரிக்கை ஆகியவற்றைத் தொடர்ந்து வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வருகையில் ஏற்பட்டிருக்கும்— ஏற்படப்போகும்— வீழ்ச்சி ஸ்ரீலங்கா அரசைப் பெரும் சங்கடத்திற்கு உள்ளாக்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து நிலைமையைச் சமாளிப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் நேற்று முன்தினம் முக்கிய வெளிநாடுகளின் தூதர்களை அவசரமாக அழைத்துப் பேச்சு நடத்தியிருக்கிறார்.

உல்லாசப் பயணிகள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பாதுகாப்புப் பற்றி வெளிநாடுகளின் அச்சம் தெரிவிக்கப்பட்டமை குறித்து ஸ்ரீலங்கா அரசாங்கம் கொண்டுள்ள கவலையை இந்தச் சந்திப்பின்போது அமைச்சர் ஹமீத் வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்கிக் கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா அரசு கவலைப்பட வேண்டிய முக்கிய விடயங்களில் கவலையை — கரிசனையை — காட்டத் தவறியதன் விளைவே இன்று உல்லாசப் பயணத்துறைக்கு எச்சரிக்கை வடிவத்தில் வந்திருக்கிறது. இதனை வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஸ்ரீலங்கா அமைச்சருக்கு சுட்டிக்காட்டியிருப்பார்கள் என்று நம்புவோம்.

தமிழினத்துக்கு எதிராக சிங்கள அரசின் பரிவாரப் படை கட்டவிழ்த்து விடப்பட்டபோது —

தமிழரின் தாயக பூமியை திட்டமிட்ட முறையில் கபளீகரம் செய்தபோது —

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை — நியாய யுத்தத்தை — அடக்குகின்றோம் என்ற பெயரில் — அடிப்படை மனித உரிமைகளை மதியாமல் — கண்மூடித்தனமான குண்டுவீச்சுத் தாக்குதல்கள் போன்றவற்றின் மூலம் அப்பாவித் தமிழர்களை கொன்றொழித்த போது —

பொருளாதாரத் தடை முதலியவற்றின் பெயரால் தமிழர்களின் பொருண்மிய வளத்தை நாசமாக்க முயன்ற போது —

காட்ட வேண்டிய உண்மையான கவலையை — சிரத்தையை — காட்டத் தவறியதால் ஏற்பட்ட விளைவே — வடக்கு, கிழக்கில் நிலவும் சிக்கல்களில் பாதிக்கப்படுவது தமிழர் தானே என்ற எண்ணத்தில் காட்டப்பட்ட உதாசீனப் போக்கே— இன்று தலைநகர் கொழும்பில் உல்லாசப் பயணத்துறைக்கு மிரட்டல் என்ற உருவத்தில் சிங்கள அரசுக்கு விலையாக வந்திருக்கிறது.

தமிழருக்கு எதிரான யுத்தத்தில் கோடி கோடியாக பணத்தைக் கொட்டி திண்டாடிக் கொண்டிருக்கும் கொழும்பு அரசுக்கு, உல்லாசப் பயணத்துறை வருவாயில் விழுந்திருக்கும் அடி— இனிமேலாவது இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற உண்மையை உணர்த்தினால் சரி.

உல்லாசப் பயணத்துறை மூலம் அந்நியச் செலாவணியைப் பெற்று, அதனை தமிழரை அழிக்கும் அநியாயப் பணிக்கு ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தும் போது—

அந்த உல்லாசப் பயணத்துறைக்கு மிரட்டல் விடுக்கும் எல்லாளன் படையின் செயற்பாட்டில் நியாயம் இருக்கத் தான் செய்கிறது என்பதை மேற்குலகமும் உணர வேண்டும்.

ஸ்ரீலங்கா அரசின் கோரத்தனமான மனித படுகொலைச் செயல்களுக்கு உதவும் வகையில் ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் மற்றும் நிதியையும் வழங்கி வரும் வெளிநாடுகள்—

இத்தகைய நிலை இங்கு தோன்றியமைக்கு தாங்களும் ஒருவகையில் காரணம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

---

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும்

# புற்று நோயாளர்களுக்கு கொழும்பில் விடுதி வசதி

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ். மாவட்டத்தில் இருந்து புற்றுநோய்க்கு சிகிச்சை பெற கொழும்பு செல்லும் நோயாளர்கள் தங்க விடுதி ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

கொழும்பு செல்லும் நோயாளர்கள் தங்குமிட வசதி பெற எதிர்நோக்கும் கஷ்டங்களை அடுத்து இந்த விடுதியை அமைக்க முடிவு செய்யப்பட்டதாகவும் —

லண்டன் கான் (CANE) நிறுவனம் வடமாகாண புற்று நோய்த்தடுப்பு சங்கம் வழங்கியுள்ள உதவியில் இருந்து தனியான வீடு ஒன்றை வாங்கி இந்த விடுதியை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் — வடமாகாண புற்று நோய்த் தடுப்பு சங்கத் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் அங்கு தங்கும் நோயாளர்களுக்கு உதவ ஒருதொகை பணமும் வழங்கப்படவிருப்பதாக அவர் தெரிவித்தார். [த-3-162)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 22

யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அரசியல் துறையின் கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

சகல விளையாட்டுக் கழகங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களையும் —

சகல விளையாட்டுத்துறை சார்ந்த சங்கங்களின் நிர்வாகசபை உறுப்பினர்களையும்—

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்களையும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொண்டுள்ளது. [த]

## ஊரெழு கம்பன் விழா நாளைய நிகழ்ச்சிகள்

ஊரெழு கம்பன் விழாவின் மூன்றாவது நாள் நிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு க. நடராஜா தொடக்கவுரை நிகழ்த்துவார்.

காலையில் திரு. இ. ஜெயராஜ் ஜெந்திபதியாகக் கொண்டு வழக்காடு மன்றம் நடைபெறும்.

மாலை நிகழ்ச்சிகள் 5 மணிக்கு பிரம்மஸ்ரீ நவீரமணி ஐயர் தலைமையில் ஆரம்பமாகி நடைபெறும். கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து இளைஞர் விவாத அரங்கம் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையிலும் கவியரங்கம் திரு இ. முருகையன் தலைமையிலும் நடைபெறும். (த)

## பெண் எம். பியை மிரட்டிய பொலீஸ் அதிகாரி மீதுவழக்கு

கொழும்பு, ஏப். 22

மொனறாகலை மாவட்ட எம். பி. திருமதி சுனித்ரா ஜயசேனாவை கொலை செய்வதாக மிரட்டியதாக திஸமஹாரகம பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி காமினி அபேவிக்ரம மீது திஸ்ஸமஹாரகம நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஜயசேன தமது சட்டத்தரணி மூலம் குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் கீழ் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

தென் மாகாண சபைத் தேர்தலின் போது இம் மிரட்டல் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-எ-6)

## யாழ். செயலக முதற்கட்ட திருத்த வேலைகள் பூர்த்தி

யாழ்ப்பாணம். ஏப். 22

குண்டுவீச்சால் சேதமடைந்த யாழ். செயலகத்தின் முதாம் கட்ட திருத்த வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மேல்மாடிக் கட்டடத்தில் தற்போது நடைபெறும் வேலைகள் பூர்த்தியடைந்து 2 மாதத்தில் பாவனைக்கு வழங்கப்படும் என்றும்.

பின்னர் கீழ்தள வேலைகள் 6 மாதத்தில் பூர்த்தியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நிர்மாணத்துறை யாழ். மாவட்டபதில் பிரதம பொறியியலாளர் திரு.சு. சுந்தரகுமாரின் மேற்பார்வையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. (த-3)

## புத்தளத்தில் மீனவர் கொலை: படையினரின் இயலாமையை சாடுகின்றார் அமைச்சர்

கொழும்பு, ஏப். 22

புத்தளம் மாவட்டம் பத்தலங்குண்டுவ பகுதியில் 25 மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து அமைச்சர் வெஸ்டஸ் பெரேரா கவலை தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தைத் தடுப்பதற்கு ஸ்ரீலங்கா கடற்படை தவறிவிட்டதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

ஆளணி மற்றும் தளபாடங்கள் இன்மை ஆகிய காரணங்களைக் காட்டாது மீனவரை பாதுகாக்க வேண்டியது கடற்படையின் கடமை என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப்.22

தேசிய கல்வி நிறுவகத்தால் யாழ் மாவட்டத்தில் நடத்தப்படும் பட்டப் பின் படிப்பு டிப்புளோமா (1994/95) பயிற்சிக்கு விண்ணப்பித்த யாழ். வலயம் I பாடசாலைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலயம் I இன் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி இத்தகவலை வெளியிட்டுள்ளார். (த-5)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் ஏப். 22

கூட்டுறவாளர்களால் வெளியிடப்பட்டு வந்த ஐக்கிய தீபம் மாதாந்த பத்திரிகை பல ஆண்டு கால இடைவெளிக்குப்பின் மீண்டும் வெளியிடப்படவுள்ளது.

இதன் முதலாவது ஏப்ரல் மாத வெளியீட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் தலைவர் திரு வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (த-162)

## தும்புதொழிற்சாலை

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் தலைமையகத்தினர் கொழும்புத்துறை கிழக்கு மணிப்புரியில் தும்பு தொழிற்சாலை ஒன்றை அமைக்கவுள்ளனர்.

ஒன்றரை லட்சம் ரூபா செலவில் அமைக்க இருக்கும் இந்த தும்புத் தொழிற்சாலைக்கு படித்து வேலையற்றிருக்கும் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [த-17)

# பூபதி அன்றுவிடுத்தகோரிக்கை இன்று தெற்கில் ஒலிக்கிறது

## நினைவுக் கூட்டத்தில் புலிகளின் பிரமுகர் உரை

"அன்னை பூபதி 6 ஆண்டுகளுக்கு முன்பு முன்வைத்த "விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும், யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டு" என்ற கோரிக்கைகள் இன்று தென் இலங்கையில் மூலை முடுக்கெல்லாம் ஒலிக்கின்றன. சிங்கள மக்களாலும், மதத் தலைவர்களாலும் விடுக்கப்படும் இந்த கோரிக்கைக்கு பதில் அளிக்க முடியாது சிங்களத் தலைவர்கள் தவிக்கிறார்கள்.

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. வே. பாலகுமார்.

தியாக சீலம் அன்னை பூபதியின் 6ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் இரவு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்திலேயே அவர் இப்படிக் கூறினார்.

மட்டு-அம்பாறை தொடர்பக பொறுப்பாளர் திரு. யோகன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு இளையவன் ஈகைச்சுடரை ஏற்றினார்.

மகளிர் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி அர்ச்சனா அன்னை பூபதியின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை சூட்டினார்.

திரு வே. பாலகுமார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

"எமது விடுதலைப் போராட்டத்தில் புதியதோர் உத்வேகத்தையும், பரிணாமத்தையும் அன்னை பூபதியின் தியாகம் ஏற்படுத்தியது"

வட தமிழீழத்துக்கும், தென் தமிழீழத்துக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்தியது மட்டக்களப்பில் அன்னை மேற்கொண்ட தியாகம் இன்று இங்கு கொண்டாடப்படுகிறது.

சிங்கள அரச வடக்கையும், கிழக்கையும் துண்டாட எடுக்கும் முயற்சி, அன்னை பூபதியின் தியாகத்தால் ஒரு போதும் பலிக்காது.

இன்று எமது மக்கள் படும் அவலங்களுக்கு முக்கிய காரணகர்த்தா இந்தியா தான். இந்தியாவின் சதியால் நாம் இன்று 4 [illegible] விடுமுறை அனுஷ்டித்து அஞ்சலி செய்கிறோம்.

இலங்கை அரசுக்கு உதவி செய்த இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் எதிராகப் பட எமக்கு இந்தியா பயிற்சி அளித்தது. இன்று அமெரிக்காவும், இஸ்ரேலும் இந்தியாவின் நண்பர்களாக மாறி உள்ளன.

இந்தியாவுடன் நாம் தொடர்ந்து தொடர்பு வைத்திருந்தால், இன்று எம்மை அவர்கள் தூக்கி எறிந்திருப்பார்கள் என்றால்.

நீதி, நிர்வாகத் துறை பொறுப்பாளர் திரு பரா பேசுகையில் கூறியதாவது:-

இந்தியாவின் ஆக்கிரமிப்பை உலகுக்கு காட்டியவர் அன்னை பூபதி.

தென் இலங்கையில் - தென் மாகாண சபைத் தேர்தல் முடிவு எமது போராட்டத்தை நியாயப் படுத்தும் வகையில் அமைந்துள்ளது. எமது போராட்டத்தை நியாயப்படுத்தும் வகையில் சிங்கள மக்கள் தமது முடிவை வெளியிட்டுள்ளார். எமது போராட்டம் நீதி, நியாயம், தர்மம் நிறைந்தது என்பதை சிங்கள மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளார் என்றார்.

அரசியல் துறை பயிற்சிப் பாசறைப் பொறுப்பாளர் அரசண்ணா, மகளிர் மேம்பாட்டு புனர்வாழ்வு பொறுப்பாளர் கூடரவி, கோகிலா ஆகியோரும் பேசினர். (த-3)

---

## புலிகளின் குரல் வானொலியில்

22-04-1994
வெள்ளி இரவு

★ 8-01 — மண்டினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி "மண்"
★ 8-10 — காங்கேசன் துறை காபர்வீயூ ஹோட்டல் தாக்குதல் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி.
"பரிமாணத்தின் ஆரம்பம்"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — "மேற்குலகம் தோற்றுவிக்கும் மனித ஓநாய்கள்"
★ 8-50 — வாத்திய கானங்கள்

23-04-1994
சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்.
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஏப் 22

இதுவரை நாளும் யாழ் I கல்வி அலுவலகத்தில் இயங்கிய "பாடசாலை வேலைகள் பகுதி" கடந்த 15 ஆம் திகதி முதல் கடற்கரை வீதியில் உள்ள நிர்மாணத்திணைக்கள வளாகத்தில் உள்ள கட்டடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (த-5)

## நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி

யாழ்ப்பாணம், ஏப். 22

அறவழிப் போராட்டக் குழுவினால் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவித் திட்டத்தின் கீழ் நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் பயிற்சி கடந்த 9 ஆம் திகதி அறவழி பயிலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் முப்பதுக்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் கீழ் மேலும் கருக்கொழுத்தல், தட்டெழுத்து போன்ற பயிற்சி நெறிகளும் விரைவில் ஆரம்பமாகவுள்ளன (ஒ)

## தெய்வீக...

[2ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்றாகிய மகோற்சவத்தின் போது தேர்த்திருவிழா பிரமோற்சவம் எனச் சிறப்புப் பெறுகின்றது. ஆன்மாக்களைப் பீடித்துள்ள ஆணவ மலத்தை நீக்கிக் கொள்ள தேர்த்திருவிழா அடியார்களுக்கு சிறந்த வாய்ப்பை அளிக்கின்றது. உயிர்க்குயிராக விளங்கும் இறைவன் தேரில் எழுந்தருளி அருள் பாலிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்த இராஜோபசாரமாகும். தேர் அசைந்து பவனிவரும் அமைப்பைக் கொண்ட கோயில் எனக் கூறலாம். தேரில் இடம்பெற்றுள்ள கலைச் சிறப்புமிக்க சிற்பங்கள் இறைவனது தெய்வீகப் பெருமைகளைச் சித்திரிக்கின்றன.

இறைவனுக்குரிய திருப்பணிகளில் மனமுவந்து ஈடுபடும் அடியார்களுக்கு உயர்பேறு சித்திக்கும் என்பது சாஸ்திர உண்மையாகும். சிறந்த திருப்பணியாக அமையும் இச்சித்திரத்தேர் விநாயகர் அடியார்களது பக்தியின் சின்னமாக எம்பெருமானுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றது.

தேரில் எழுந்தருளி இறைவன் பவனிவரும்போது அடியார்கள் அனைவரும் எந்தவித வேறுபாடுமின்றி தேரின் வடத்தைத் தொட்டு இழுத்தலினால் தமது பிறவிப்பிணி நீங்கும் வகையில் இறைவனது திருவருளுக்கு உரியவராகின்றனர். மக்கள் அனைவரும் பக்தியினால் ஒன்றுபட்டு இன்பம் எய்தி மகிழ்ச்சியுடன் இறைவனை வழிபட்டு நிறைவாழ்வு வாழ தேர்த்திருவிழா பெரிதும் துணை புரிகின்றது.

கலைத்துறையில் ஆற்றல் வாய்ந்த கலைஞர் சிற்பக் கலாகேசரி ஆ. தம்பித்துரையின் கைவண்ணத்தில் இத்தேர் உருவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தேரினை உருவாக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள கலைஞர்களுக்கும் அடியார்கள் அனைவருக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக. ★

---

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி விரைவில் தரம் உயரும்

யாழ்ப்பாணம், ஏப் 22

சாவகச்சேரி வைத்திய சாலை ஆதார வைத்திய சாலையாக தரம் உயர்த்தப்படவுள்ளது.

தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ள வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். சண்முகதாஸ் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

ஏற்கெனவே பருத்தித்துறை வைத்தியசாலை ஆதார வைத்திய சாலையாகதரம் உயர்த்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை வைத்திய சாலையையும் ஆதாரவைத்திய சாலையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் இந்த வைத்தியசாலை இடம் பெயர்ந்திருப்பதால் அது கைகூடாது போனது என்று தெரிவிக்கப்பட்டது [இ-162]

## ஆலயங்களில்

எழுதுமட்டுவாழ் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரப் பெருமான் கோயில் திவ்விய சிவருத்திர மஹாயாகப் பெருவிழா நாளை சனிக்கிழமை நடைபெறும். (க)

★ ★ ★

கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 11மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறுதினம் காலை 10 30மணிக்கும் நடைபெறும். (க)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி அம்பிகா சமேத ஸ்ரீகாயாரோகணேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்தொன்பது தினங்கள் நடைபெறும். (க-111)

★ ★ ★

இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலயத்துக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர் வெள்ளோட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். அலங்காரச் சப்பர வெள்ளோட்டம் 23ஆம் திகதியும் இரதோற்சவம் 24ஆம் திகதியும் நடைபெறும் (த-152)

கன்னாகம் ஸ்ரீ சந்திரமௌலீச் சிவன் கோயில் சோமஸ்கந்த மூர்த்தி மண்டலாபிஷேக உற்சவத்தில் தினமும் மாலை5 மணிக்கு அபிஷேக ஆராதனையும் 6 30மணியளவில் யூனியன் கல்லூரி ஆசிரியர் முத்தமிழ் புலவர் திரு. செ. குணபாலசிங்கத்தின் பெரிய புராண தொடர் விரிவுரையும் இடம்பெறும். (த-89)

## 3 தமிழர் மட்டுமே தெரிவு

கணக்காளர் சேவையில் முதலாம்தர பரீட்சையில் தெரிவான 27 பேரில் மூவர் மட்டுமே தமிழர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவுக் கணக்காளர் திரு காவிரசிங்கம், யாழ் புனர்வாழ்வுப் பிரிவு உதவி திட்டப்பணிப்பாளர் திரு க. மகாலிங்கம், மல்லைத்தீவு செயலக கணக்காளர் திரு. எஸ். சோமசௌந்தரலிங்கம் ஆகிய தமிழர்களே பதவி உயர்வு பெற்றவர்களாவர். (த-3

## 20 கொலை சம்பவங்கள்

கொழும்பு, ஏப் 22

புத்தாண்டுக் காலத்தில் இரு தினங்களில் மட்டும் நாட்டில் இருபது கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றன என்று பொலீஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. (த-எ-6)

## தோல் பாதிக்காத முறையில் குறி சுடுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப். 22

தாவரப்பதனிடல் முறையிலான தோல்பதனிடல் முறை பாரிய கைத்தொழிலாக தமிழீழத்தில் உருவாகும் வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்காக, விலங்குகளின் தோல்கள் எதுவித சேதங்களும் அற்றதாக இருக்கக்கூடிய விதத்தில் விலங்குகளுக்குக் குறிசுடுதல் இருக்க வேண்டும் என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக இந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் மிருகங்களுக்குக் குறிசுடும் வழக்கம் தோல்பதனிடும் துறையின் வளர்ச்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

தற்போதைய முறையில் குறிசுடப்படும் தோல்கள் பதனிடப்பட்டாலும் அவற்றின் சந்தைப் பெறுமதி வெகுவாகக் குறைந்தே இருக்கும்.

இது மட்டுமன்றி அத்தகைய சேதமும் வீழ்ச்சியாகவே காணப்படும் அதனால் அவற்றைப் பதனிட செலவிடப்பட்ட உழைப்பு வீணாகிவிடும்.

இவற்றைக் கருத்திற்கொண்டு இறைச்சிக்காக கால்நடை வளர்ப்போர் அவற்றின் தோல்கள் சேதப்படாமல் இருக்க, தோல் பதனிடலுக்கு முக்கியமில்லாத பகுதிகளான கன்னம், காதுகள், கொம்புகள், ஏரி, பின்னங்கால்களின் கீழ்ப்பகுதிகள், குளம்புகள் போன்ற இடங்களிலேயே குறிகளையோ, அடையாளங்களையோ இடலாம்— இப்படி அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது (எ)

## தமிழில் விஞ்ஞான நூல்களை இங்கே வெளியிட வேண்டும்

### பொறியியல் துறைப் பேராசிரியர் உரை

யாழ்ப்பாணம், ஏப். 22

'தமிழ் மொழியில் விஞ்ஞான நூல்களை நாங்கள் இங்கே வெளியிட வேண்டும் கல்வி அறிவுள்ளவர்கள் இதைச் செய்ய வேண்டும். தென்னிந்தியாவில் வரும் நூல்களை மட்டும் எதிர்பார்த்து நாம் வாழ முடியாது.'

யாழ். பல்கலைக்கழகப் பொறியியல் துறைப் பேராசிரியர் திரு வி நவரட்ணராஜா அண்மையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் இவ்வாறு கூறினார்

விஞ்ஞான உதவி கல்வி பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

"நாம் ஒவ்வொருவரும் சமுதாயத்திற்கு என்ன செய்திருக்கிறோம் என்பதை மனதில் கொண்டு செயற்பட்டால் எமது சமுதாயம் நிச்சயம் முன்னேறும் என்றார்.

இவ்விழாவில் பங்கேற்ற யாழ் வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் திரு சு. சந்தசாமி கருத்துரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

கணித பாடத்தில் பெரும்பாலான மாணவர்கள் பின் தங்கிய நிலையில் இருப்பது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. கணித பாடம் ஒன்றல்ல இதை சரியான முறையில் மாணவர்களுக்கு கற்பிக்கக் கூடிய தெளிவான எண்ணக்கரு இன்மையே இதற்கான காரணமாகும்

முன்னதாக வன்னி மாவட்ட தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. தாவேந்தன் தேசியக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். யாழ் வலயம் - 1 கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி மங்கள விளக்கேற்றினார்.

விழாவில் விஞ்ஞான உதவிக் கல்வி பணிப்பாளர் திரு வ சுந்தரலிங்கம் வரவேற்புரையாற்றினார். கணிதப் பணிப்பாளர் திரு வேலாயுதம், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சல்லையா ஆகியோரும் இங்கு உரையாற்றினார்கள்.

விழாவில் "துளிர்" சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளியிடப்பட்டது. மாணவர் ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசுகளை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன் வழங்கினார். மூலவள நிலைய பொறுப்பாசிரியர் திரு வே சண்முகலிங்கம் நன்றியுரை நிகழ்த்தினார் (த-163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வசன...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த சர்வசனவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என நான் யோசனை கூறப்போவதில்லை.

இந்த உணர்ச்சி வசப்படக்கூடிய பிரச்சினையைக் கவனமாக எனது கட்சி கருத்துக்கு எடுத்துள்ளது.

மாகாணங்களின் எல்லைகளை மீள் நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் எனது கட்சி யோசனை கூறியுள்ளது.

மாகாணசபை முறை அதன் நோக்கத்தை நிறைவேற்றவில்லை. இந்த முறையில் பல குறைபாடுகள் உள்ளன. இந்த முறையை மாற்றி அமைக்க வேண்டும். ஆனால் அது அதிகாரங்களைப் பகிர்வு செய்வதை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். இல்லையேல் அதில் கருத்து இருக்காது — என் சொன்னார். (இ-எ)

## ஷப்றா நிதி மீளளிப்பு; முதல் தவணை கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 22

''ஷப்றா யுனிக்கோர் பினான்ஸ்'' நிறுவனத்தில் முதலீடு செய்தோருக்கு நிதி மீளளிப்புச் செய்யும் திட்டத்தின் கீழ் முதலாவது தவணை கொடுப்பனவாக — 20 வீத வைப்புத் தொகை — தற்போது செலுத்தப்பட்டு வருவதாக நிறுவனத்தின் இயக்குநர் சபை கொழும்பில் அறிவித்திருக்கிறது.

இது குறித்து நிறுவனத்தின் யாழ். அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது— மீளளிப்புத் தொடர்பான காசோலைகளை எடுத்து வருவதற்காக யாழ். அலுவலக நிர்வாக அதிகாரி கொழும்பு சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வைப்புத் தொகை மற்றும் மத்திய வங்கி அறிவித்த திகதி வரையான வட்டி ஆகியவற்றின் ஐந்தில் ஒரு பகுதியே முதல் தவணையில் செலுத்தப்படவிருக்கிறது. (உ)

## கொல்லப்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பெர்னாண்டஸும் மற்றும் 12 படையினரும் உயிரிழந்தனர் என்று அரசாங்கம் கூறினாலும் -

அச் சம்பவம் சதிச் செயலாக இருக்கவேண்டும் என்று சந்தேகம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## பிளாம்பயான்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று மாலையே மீண்டும் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

இதேவேளை நரோமா கப்பலும் 130 பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்து மீண்டும் மாலை கொழும்பு செல்லும் பயணிகளுடன் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது

## விளையாட்டு நிகழ்வுகள்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக் கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளில் வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று காலை 9 மணிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு ஆண்களுக்கான கபடிப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். (த-143)

★ ★ ★

அமரர் ஓறேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக ஸ்கந்தா பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சுன்னாகம் சரா சேது, விபஓபிற் நிறுவனங்கள் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை காலை 8 15 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

ஆறுபேர் கொண்ட அணிகளுக்கு இடையில் — இரண்டு இனிங்ஸ் ஆட்டங்களைக் கொண்டதாக நடத்தப்படும் இச்சுற்றுப்போட்டி தொடர்ந்து ஞாயிறு, திங்கட்கிழமைகளிலும் இடம்பெறவுள்ளது. (உ)

## இன்று

நல்லூர் மறுமலர்ச்சிக் கழகத்தின் 40 ஆவது ஆண்டு நினைவுவிழா இன்றும் நாளையும் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய முன்றிலில் நடைபெறும். விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [த-111]

★ ★ ★

வரணி குடமியன் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட யுவதிகளினால் தயாரிக்கப்பட்ட தையல் பொருள்களின் பொருள்காட்சியும் விற்பனையும் இன்று வெள்ளிக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறும். (த-117)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஞானவீர சங்க சன சமூக நிலைய ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டிகளும் இன்று நடைபெறும். தலைவர் திரு. க. ம இராஜேந்திரன் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திரு. இ. இளங்கோவன் கலந்து கொள்வார். (த-143)


## அரியாலை புனித யூதா ஆலயத் திருவிழா 1994

23-4-94 மாலை 5 மணி
நற்கருணை வழிபாடு
24-4-94 காலை 7 மணி
திருநாள் திருப்பலி

மாலை 7 மணிக்கு திவுப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து அரியாலைப் பகுதியில் வசிக்கும் கலைஞர்கள் வழங்கும்

''யூதாததேயு'' நாட்டுக்கூத்து

ஆலய அரங்கில் நடைபெறும்.

(30525) அரியாலை பங்குத்தந்தை


## மரண அறிவித்தல்கள்

### DR. P. இராஜரட்ணம்

அச்சுவேலி அரசாங்க வைத்தியசாலையில் கடமையாற்றியவரும், மானிப்பாய், தெல்லிப்பளை, வல்வெட்டித்துறை வைத்தியசாலைகளில் முன்பு பணியாற்றியவரும், தெல்லிப்பளையைச் சேர்ந்தவரும் தற்போது மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமான Dr. இராஜரட்ணம் அவர்கள் 21-4 1994 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் நன்னிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், அருமைநாயகம் (இளைப்பாறிய நில அளவை உதவி அத்தியட்சகர்), மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், சசிகரன் (பழைய மாணவன், யூனியன் கல்லூரி— தற்போது மானிப்பாய் இந்துக் கல்லூரி G-C-E- A/L மாணவன்), தர்சினி (மாணவி, யூனியன் கல்லூரி G-C-E- A/L) ஆகியோரின் அன்புத் தந்தையும், புனிதவதி கனகரட்ணம், Dr. செந்தில்வல்லி, பங்கயற்செல்வி (ஆசிரியை, திருஞான சம்பந்த வித்தியாசாலை, வட்டுக்கோட்டை), சிவகாமசௌந்தரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோகநாதன் [உதவி நில அளவை அதிகாரி], மகேந்திரன், சோமநாதன், தேவராஜன், தேவிகாராணி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் 22-04-1994 இன்று பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
திருமதி R. செல்வநாயகி
[மனைவி]
23, சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
[30534]

### திருமதி ஞானம்மா செல்லத்துரை

சுவிலனைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஞானம்மா செல்லத்துரை 20-04-94இல் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை(பொன்னுத்துரை) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி அம்பிகை கைலைநாதன் (கொழும்பு), திருமதி ஞானாம்பிகை விக்கினராசா (லண்டன்), திரு. செல்லத்துரை சசிகேசன் (பொறியியலாளர் லண்டன்) அவர்களின் அன்புத் தாயாரும், திரு. கைலைநாதன் [இளைப்பாறிய இலங்கை வங்கி அதிகாரி கொழும்பு), வைத்திய கலாநிதி நல்லையா விக்கினராசா (லண்டன்), திருமதிராணி சசிகேசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-04-94 வியாழன் பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. ஞானசூரியர்
சுவிலை.
சுவிலை,
புன்னாலைக்கட்டுவன்
(7329)

### கந்தையா தில்லைராசா

உரும்பிராயை பிறப்பிடமாகவும், வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தில்லைராசா அவர்கள் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி கந்தையா அவர்களின் அருமைப் புதல்வரும் இராசம்மாவின் அன்புக் கணவரும், தர்மலிங்கம் (சுவிஸ்), விஜயரத்தினம் (சுவிஸ்), யோகேஸ்வரி, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ் சென்ற சோமசுந்தரம், திருமதி மங்கையர்க்கரசி, திரு பஞ்சலிங்கம் திருமதி தங்கமணி ஆகியோரின் சகோதரரும், திரு நவரத்தினம், திருமதி சொர்ணபுஸ்பம், பத்மாவதி, திரு. சச்சிதானந்தம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற பொன் செல்வராசா, சிவனேஸ்வரன், மாலினி, பிறேமளா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22 04-94 இன்று காலை 10 மணிக்கு நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலடியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தகவல்:
சிவனேஸ்வரன்
(30532) (மருமகன்)

### கதிரவேலு மகாதேவா

(கதிபா தொண்டா வித்தியாலயம் மருதனை)

புங்குடுதீவை பிறப்பிடமாகவும் கொழும்பு பட்டப்பிட்டியை வதிவிடமாக கொண்டவரும்— மருதானை தொண்டர் வித்யாலய அதிபர் கதிரவேலு மகாதேவா அவர்கள் 16-04-1994 சனியன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலு சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், வளெட்சுமியின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (லண்டன்), தர்சினி, சுரேஷ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி ஜெயலெட்சுமி சிவப்பிரகாசத்தின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மைத்துனரும், சிவகுமார் (கனடா), சிறீக்குமார் (சுவிஸ்), சந்திரகலா (லண்டன்) ஜெயகௌரி (சுவிஸ்), சசிகுமார் (லண்டன்), தவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற செல்லத்துரை, அன்னம்மா ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-04 94 அன்று கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்;
திருமதி சிவப்பிரகாசம் ஜெயலெட்சுமி
(சகோதரி)
இல. 9, கச்சேரி லேன்,
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(30535)


## யாழ். ஸ்ரீதர் திரையில்

SYLVESTER STALLONE நடித்த

**RAMBO**

தினசரி: மாலை 4-00, 6-00
சனி, ஞாயிறு காலை 10-30, மாலை 4-00, 6-00 மணி

பெப்ரவரி 94 ஒளிவீச்சு

சனி, ஞாயிறு பிற்பகல் 2-30 மணிக்கு காண்பிக்கப்படும்

[30509]

அகில இலங்கை தமிழ் மா மன்றத்தின்
நாவற்குழிச் செயலவை நடத்தும்

## கலை விழா

காலம்:- 22—04—1994 வெள்ளி பி. ப. 7·00 மணி
இடம்:- யா / நாவற்குழி ம. வி. அரங்கு
தலைமை:- செல்வி இ. ஆனந்தசுந்தரம் (இணைப்பாளர் - நாவற்குழி செயலவை)
விழா நாயகன்:- திரு. எஸ். சிவலிங்கராஜா (சிரேஷ்ட விரிவுரையாளர் தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்).
சிறப்பு விருந்தினர்கள்:- திரு. பி. முத்துலிங்கம் (அதிபர் யா / நாவற்குழி ம. வி.)
திரு. பொ. சுப்பையா (தலைவர் - அறிவொளி மன்றம்)
திரு. வரதன் (பொறுப்பாளர் - நாவற்குழி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அ. இ. தமிழ் மாமன்றம்
நாவற்குழி செயலவை
நாவற்குழி.
(7335)

## விக்னா கல்வி நிறுவனம்

52 ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக் தனித்தவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L
DAY CLASSES (8·30 – 2 00)
SAT.SUN CLASSES (8·00 – 2 00)
EVENING CLASSES (3 15 – 6 00)

★ கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட புதிய வகுப்புகளில் மேலும் சில புதிய அனுமதிகள் மட்டுமே உண்டு.

★ ஒவ்வொரு வகுப்புகளுக்கும் குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படுவர்.

(சி 8023)

## தேவை

எமது கல்வி நிறுவனத்திற்கு பெண் காசாளரும், ஆண் அலுவலக உதவியாளரும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும் (22-04-94) வெள்ளி காலை 10-00 மணிக்கும் 12-00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

கூட்டுறவுத்துறைக் கல்லூரி
C-C-A
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி-8024)

## வெள்ளிவிழா ஆண்டில்

A/L 96 விஞ்ஞான, வர்த்தக, கலைப்பிரிவுகள்
பயிற்சிப் பரீட்சைகளுடன்

ஆரம்பம்: 23 - 04 - 1994

| | | | |
|---|---|---|---|
| இரசாயனவியல் | — D சிவசோதி | பொருளியல் | — E. பிரபாகரன் |
| பௌதீகவியல் | — பிரபல்ய ஆசிரியர் | வர்த்தகம் | — பாலா |
| தாவரவியல் | — ஐங்கரநேசன் | கணக்கியல் | — பாலவாசன் |
| விலங்கியல் | — ஞானேந்திரன் | தமிழ் | — திருஞானம் |
| தூயகணிதம் | — முருகையா | புவியியல் | — விலசன் |
| பிரயோக கணிதம் | — முருகையா | அரசியல் | — ஜெயன் |
| ஆங்கில இலக்கியம் | — ஜெயக்குமார் | வரலாறு | — சீலன் |
| இந்து நாகரிகம் இந்து சமயம் | — காந்தன் | கிறிஸ்தவம் | — பங்கிராஸ் |

நாடகமும் அரங்கியலும் — ஸ்ரீ

பொண்ட் (BOND) கல்வி நிறுவனம்

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[7333]

வில்லூன்றி

## சித்திரா பூரணை விழா

25 - 04 - 94 திங்கட்கிழமை
வில்லூன்றி விநாயகர் தீர்த்தோற்சவம்

அதிகாலை 5-30 மணி வசந்தமண்டபப் பூசை
காலை 7 மணி வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்த வாரி
காலை 7-45 மணி சுவாமி கோவிலுக்கு எழுந்தருளல்

★ வில்லூன்றி புனித தீர்த்தம் துப்புரவு செய்வதற்காக 24 - 04 - 94 காலை 7 மணி முதல் 25-04-94 காலை 7 மணி வரை பொதுமக்கள் பாவனைக்கு மூடப்பட்டிருக்கும். ஆயினும் அந்தியேட்டிக் கிரிகைகள் செய்வதற்குத் தடையிராது.

★ சித்திரா பூரணை தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வில்லூன்றி தேவஸ்தான தர்மபரிபாலன சபை
வில்லூன்றி புனித தீர்த்த பரிபாலன சபை
வில்லூன்றி. (30526)
18-04-94.


## பிரிவுத் துயரில் பன்னிரு மாதங்கள்

தருமராசா (செந்தில்) வதனா (வாசினி)
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்

உம்மிரு பாதங்கள் பாடையிலே போனதும்
பன்னிரு மாதங்கள் பாரை விட்டேபோயின
எம்மிரு பாதங்கள் பாதைவிட்டே மாறின

கந்தசாமி குடும்பத்தினர்
(30533) கோண்டாவில்

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி அ. கமலாதேவி B A.
(அபிவிருத்தி உத்தியோகஸ்தர்)

தோற்றம்: 03-01—1948 மறைவு: 15—04—1981
திதி 22-04-1994

எங்கள் நினைவில் நிலைத்திருக்கும் உங்கள் முகம் என்றென்றும் எங்கள் உள்ளங்களில் பதிந்திருக்கும். உங்கள் நினைவே எங்கள் இதயங்களை நிறைத்திருக்கும்.

உங்கள் நினைவால் வாடும்:

தாயார், சகோதரன், மைத்துனி, மருமக்கள், சகோதரர்கள், சகோதரிகள், சிறிய தந்தையர்கள், சிறியதாய்மார்கள், மாமன்மார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்;

''அக்கா அகம்'',
இணுவில். (30530)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 80 2/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22 - 04 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org